(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சையில் ஒரு துணைத் தாசில்தார் கொலையுண்டதும் அதனுல் அதிகாரிகளிடையே ஏற்பட்டுள்ள பீதியும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. மாரிமுத்து ஆகிய இருவரும்,

Failure of the Government to protect its officials as seen by the murder in his residence at Thanjavur of R. Krishnan, Deputy Tahsildar on 23rd January 1974 and panic among officials.

என்ற பொருள் பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறுர்கள். அவையை ஒத்தி வைத்து விவாதிக்க இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இப்பொழுது விளக்குவார்கள்.

திரு. கே. டி. கே தங்கமணி : சார், 23 ஆம் தேதி இரவு தஞ்சையில் ஆர். எம். எஸ். காலனி என்ற சர்க்கார் உத்யோகஸ்தர்களும் மற்றவர்களும் குடியிருக்கக்கூடிய பகுதியில் குடியிருந்து வந்த டெபுடி தாசில்தார் கிருஷ்ணன் என்பவரை சிலர் வீட்டுக்குள்ளே புகுந்து படுகொலை செய்ததாக செய்தி வந்திருக்கிறது. பொதுவாக, அந்த அதிகாரியைப் பொறுத்தவரையில், அவர் ஒரு நல்ல அதிகாரி என்றும் அவர் நேர்மையாக நடத்தக்கூடியவர் என்றும் அந்த வட்டார மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. அப்படிப்பட்டவருடைய வீட்டுக்குள்ளே புகுந்து கொலை நடந்திருக்கிறது. பல காரணங்கள் சொல்லப்படுகிறது. நான் இதைப் பற்றி விசாரிக்கின்ற போது அந்த கொலைக்கு வேறு சிலர் சம்பந்தப்பட்டிருக்கின்ற மாதிரி சொல்லப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியாது. போலிஸார் இன்வெஸ்டிகேஷன் ஆரம்பித்திருக்கிறுர்கள். இதிலே என்னுடைய பாயிண்ட் என்னவென்றுல், இம்மாதிரி அதிகாரிகளைப் பொறுத்தவரையில்,

We must disabuse any fear which officials may have for putting straightforward acts in favour of the people.

என்ற ஒரு குறிப்பிட்ட விஷயத்தைத் தான் சொன்னேன். எனக்கு முதலில் கிடைத்த தகவலில், அவர் ஒரு நல்ல அதிகாரி என்று சொன்னுர்கள். மேற்கொண்டு போலீஸார் இன்வெஸ்டிகேஷன் நடத்திக் கொண்டிருக்கிறுர்கள். ஆனுல், சம்பவத்தினுடைய முறைகளைப் பார்த்தால், திட்டமிட்டு கொலை செய்தவர்கள் அதற்கு வேறு எதாவது ஒரு காரணத்தைக் காண்பிக்க வேண்டுமென்ற முறையில் செய்திருப்பார்கள் போல தோன்றுகிறது. ஒரு நகையைத் திருடியதாக அதிலே சேர்த்திருக்கிறுர்கள். இன்வெஸ்டிகேஷன் நடக்கிற காரணத்தால் இதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை. அதே நேரத்தில், வேறு முறையில் தான் நடந்திருக்கிறது என்ற முறையில் சொல்வார்களேயானுல், அது நான் எழுப்பிய விஷயத்திற்கு பதிலாக ஆகாது என்பதையும் இந்த இடத்தி

1974 சனவரி 29] *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அதிகாரிகள் நேர்மையாக நடத்தக் கூடிய அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் கேட்ப தெல்லாம். வந்திருக்கிற விஷயங்களைப் பார்த்தால், நம்ப முடியாதபடி, 7, 8 குழந்தைகளுக்கு தாயானவள், தவருக நடந்தாள் என்பது மாதிரி செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட விஷயத்தில் விவரங் களுக்குள் போவதற்கிடையே இந்த அதிகாரியைப் பற்றி அரசாங்கத்திற்கு என்ன கருத்தோட்டமிருக்கிறது, மேலதிகாரிகள், எப்படிப்பட்ட விவரங்களை தெரிவித்திருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். இதை விவாதிப் பதன் மூலமாக, நேர்மையான அதிகாரிகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது என்ற தைரியம் ஏற்பட உதவிகரமாக இருக்கும். நல்ல நேர்மையாக செயல்படும் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வேண்டு மென்ற கருத்தோட்டம் எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சட்டமன்றத்தில் உள்ளவர்களுக்கும் இருக்கும். எனவே, அந்த முறை யில் இதை விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : தலைவரவர்களே, நேர்மையான அதிகாரிகள் கொல்லப்படுகிருர்கள் என்பது போன்ற ஒரு வாதத்தை எழுப்புவது சரியல்ல. நேர்மையான அதிகாரிகளுக்கு இன்று நாட்டில் வேலை இல்லை, அவர்கள் இருக்கக் கூடாது என்று யாரோ கருதுவது போலவும் அதற்காக காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்காமலிருப்பது போலவும் சொல்வதும் சரியானதல்ல. ஒவ்வொரு அதிகாரியின் வீட்டுக்கும் போலீஸ் காவல் போட்டு வைப்பதில்லை முன்கூட்டியே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதாவது சம்பவங்கள் நடக்கப் போவதாக போலீசாருக்கு—அதிகாரியானுலும், அல்லது வேறு தனிப்பட்ட மனிதர் களானுலும்—முன்னெச்சரிக்கையாக எடுத்துச் சொல்வார்களானுல் அப்போது போலீசார் அதில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பார்கள். இந்த நடந்த சம்பவத்தைப்பற்றி நான் இங்கே விவரமாகக் கூற இயலாதவனுக இருக்கிறேன். கொல்லப்பட்ட உதவி தாசில்தாரைக் கொன்றதாக அவருடைய சகோதரர்—தம்பி சந்திரன், சந்திரன் நண்பர் வீராசாமி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருக் கிருர்கள். 22-ஆம் தேதி பிற்பகல் 12 மணிக்கு. அன்று மாலை 6 மணிக்கு அவரது மனைவி மீனுட்சி என்ற நளினி கைது செய்யப்பட்டிருக் கிருள். கொல்லப்பட்டவருடைய தம்பி கைது செய்யப்பட்டிருக்கிருர்— மனைவி கைது செய்யப்பட்டிருக்கிருர். இதற்கு மேல் நான் இந்த வழக்குக்குள் போக விரும்பவில்லை. வழக்கு நீதி மன்றத்தில் இருப்பத ஞல், இந்த அவையை ஒத்தி வைத்து, இதைப்பற்றிய விவாதத்திற்குள் போக வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிப்பதற்குத் தேவையில்லை என்ற காரணத்திஞல் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்,